





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள் (CURRENT AFFAIRS)

## ஆகஸ்ட் - 2019

*We Are Here..!! To Guide You..!!*








# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஆகஸ்ட் - 02.08.2019


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- சர்வதேச நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- விருதுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்











## சர்வதேச நிகழ்வுகள்

- **இன்போசிஸ் தனது அதிநவீன சைபர் பாதுகாப்பு மையத்தை ருமேனியாவின் புக்கரெஸ்டில் துவக்கியது.**
    - இந்த பாதுகாப்பு மையம் இன்ஃபோசிஸ் டிஜிட்டல் புதுமை மையம் வழியாக வழங்கப்படும் சேவைகளின் விரிவாக்கமாகும், இது 2019 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புக்கரெஸ்டில் திறக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

- **எஸ்.யு – 30 ரக போர் விமானங்களில் பொருத்துவதற்காக ரூ.1500 கோடி மதிப்பில் அதிநவீன ஏவுகணைகளை வாங்குவது தொடர்பான ஒப்பந்தத்தை ரஷியாவுடன் இந்தியா மேற்கொண்டுள்ளது**
    - இந்த ஏவுகணைகள் வானில் இருந்து பறந்து சென்று வானில் உள்ள எதிரிகளின் இலக்கை தாக்கி அழிக்கக்கூடியது. மேலும் நீண்ட தொலைவு சென்று தாக்குதல் நடத்தும் வல்லமை கொண்டது.
    - இந்த ஏவுகணைகள், எஸ்.யு-30 ரக போர் விமானங்களில் பொருத்தப்பட்டால், இந்திய விமானப்படையின் தாக்குதல் திறன் மேலும் அதிகரிக்கும் என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன

We Shine Academy™

## தேசிய நிகழ்வுகள்

- **அருணாச்சல பிரதேச முதல்வரான பீமா காண்டு இட்டாநகரில் மாநிலம் தழுவிய மரம் நடும் திட்டமான 'சுத்தமான-பச்சை அருணாச்சல் பிரச்சாரம் 2019' தொடங்கினார்.** இந்த பிரச்சாரத்தின் கீழ் மாநில வனத்துறை 24 மணி நேரத்தில் 1 லட்சம் மரக்கன்றுகளை நட்டது

- **ஊழல் புகாருக்கு ஆளாகியுள்ள இந்திய மருத்துவ கவுன்சிலுக்கு மாற்றாக, தேசிய மருத்துவ ஆணையத்தை ஏற்படுத்தும் வகையிலும், பாரம்பரிய மருத்துவம் பயின்றோர் நவீன மருத்துவ சிகிச்சை அளிக்க அனுமதிக்கும் வகையிலும் 2019 தேசிய மருத்துவ ஆணைய மசோதாவை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது**
    - மக்களவையில் அந்த மசோதா கடந்த 29-ஆம் தேதி நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து, மாநிலங்களவையில்

மசோதாவை மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷ்வர்த்தன் தாக்கல் செய்தார்
  - மசோதாவில் உள்ள 32ஆவது பிரிவில் முறைப்படி மருத்துவ கல்வி பயிலாதவர்களுக்கு சட்டரீதியில் அங்கீகாரம் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

- **சிறாார்களை பாலியல் வன்கொடுமை செய்வோருக்கு மரண தண்டனை விதிக்க வகை செய்யும் சட்டத் திருத்த மசோதா (போக்ஸோ) மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.**
  - பாலியல் குற்றங்களில் இருந்து சிறாார்களைப் பாதுகாக்கும் சட்டத் திருத்த மசோதா-2019, மாநிலங்களவையில் கடந்த 29-ஆம் தேதி நிறைவேற்றப்பட்டுவிட்டது.
  - இந்த மசோதாவை, மக்களவையில் மத்திய மகளிர் மற்றும் சிறார் நல மேம்பாட்டு துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி அறிமுகம் செய்து வைத்தார்.

- **தில்லியில் 200 யூனிட்டுகளுக்கு குறைவாக மின்சாரத்தை பயன்படுத்தும் நுகர்வோர்களுக்கு மின்சாரக் கட்டணம் வசூலிக்கப்படமாட்டாது என்று தில்லி முதல்வர் கேஜரிவால் அதிரடியாக அறிவித்துள்ளார்.** மேலும், இது ஆகஸ்ட் - 1 ஆம் தேதி முதல் அமலுக்கு வரவுள்ளது.
  - இதன் மூலம் 200 யூனிட்டுக்கும் அதிகமாக மின்சாரத்தைப் பயன்படுத்துபவர்கள், தாங்கள் 200 யூனிட்டுக்குக் குறைவாகப் பயன்படுத்தினால் மின் கட்டனம் செலுத்தத் தேவையில்லை என நினைத்து மின்சாரத்தை குறைவாகப் பயன்படுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது

## விருதுகள்

- **ஹெபடைடிஸ் குறித்த விழிப்புணர்வை பரப்பியதற்காக DD நியூஸ் (தூர்தர்ஷன்), 24*7 இந்தியா செயற்கைக்கோள் செய்தி சேனல்க்கு "சாம்பியன்ஸ் ஆ.ஃப் எம்பாத்தி விருது" வழங்கப்பட்டுள்ளது.**
  - மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவிடமிருந்து டிடி நியூஸ் இயக்குநர் ஜெனரல் மயங்க் அகர்வால் விருதைப் பெற்றுள்ளார்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **ப்ரித்வி ஷா ஒரு ஊக்கமருந்து விதிமீறல் காரணமாக இந்திய கிரிக்கேட் கட்டுப்பாட்டு வாரியத்தால் 8 மாதங்களுக்கு இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.** BCCI ஊக்கமருந்து எதிர்ப்பு விதிகளின் கீழ் ஊக்கமருந்து எதிர்ப்பு விதி மீறல் (Anti-Doping Rule Violation – ADRV) ஆணைக்குழுவில் ஷா மீது குற்றம் சாட்டப்பட்டது

- **தைவானின் தைபேயில் நடைபெற்ற 2 வது உலக காது கேளாத இளைஞர் பூப்பந்து சாம்பியன்ஷிப் 2019 போட்டியில் தமிழக வீராங்கனையான ஜே ஜெர்லின் அனிகா 4, பதக்கங்களை (1 தங்கம், 2 வெள்ளி, 1 வெண்கலம்) பெற்றுள்ளார்.**